★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 14 ஜ. ஆகிர் 12 இதழ் 46

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28—3—83

ஸ்ரீ பராசக்தி சோதிட நிலையம்
151 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
வெளிநாடு செல்லுதல், திருமணப் பொருத்தம், கல்வி, உத்தியோகம், எண்கணிதம் பார்க்கப்படும்.
நேரில் சந்தியுங்கள் அல்லது குறிப்புடன் ரூபாய் 10/ அனுப்புக.
KL. M. Krishnapillaiy
6582

## இந்தியாவில் கடும் வரட்சி 8 கோடி மக்கள் பாதிப்பு!

(புதுடில்லி)

இந்தியாவில் தற்போது நிலவிவரும் கடும்வரட்சியினால் 8 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்திய மத்திய அரசுமாபெரும்நிவாரண இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளது.

தமிழ் நாட்டில் நிலவிவரும் வரட்சியினால் அங்கு பலஇடம்

[8ம் பக்கம் பார்க்க]

★ நிலைய அதிபரும், ஊழியர்களும் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தப்பட்டு

# கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ரூ10,000 கொள்ளை

## சந்தேகத்தில் இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புகையிரத நிலைய அதிபரும், ஊழியர்களும் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தப்பட்டு, பத்தாயிரத்து அறுநூறு ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது! இச்சம்பவத்தின் போது புகையிரத நிலைய அதிபரின் கைக்கடிகாரமும் கொள்ளையர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது!

இச்சம்பவம் நேற்று அதிகாலை நிகழ்ந்துள்ளது.

இக்கொள்ளை சம்பந்தமாக விசாரணை நடத்திய கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்த தபால் புகைவண்டி கிளிநொச்சியை வந்தடைந்த பின்னர் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்ட சிறிது நேரத்தில் 4-10-க்கு இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது

றிவோல்வரும். கிறிஸ்கத்தியும் வைத்திருந்த இருவர் புகையிரத நிலைய அதிபரின் அறைக்குள் திடீரெனப் புகுந்து அதிபரையும், வாயிலில் நின்ற இரு ஊழியர்களையும் பயமுறுத்தி மேசை ஒன்றுக்குக் கீழ் இருக்க வைத்துவிட்டு, 10, 600 ரூபா ரொக்கத்தையும், அதிபரின் கைக்கடிகாரத்தையும் கொள்ளையடித்துச் சென்றனராம்.

கொள்ளை அடித்தவர் ரீ ஷேர்ட்டும், சாரமும் அணிந்திருந்ததாக கிளிநொச்சிப்பொலிஸில் புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ரணசிங்க, சார் ஜண்ட்டுகள் பொன்னம்பலம், சுப்பிரமணியம், கான்ஸ்டபிள் சிவராசா ஆகியோர் சந்தேகத்தின்பேரில் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட யாழ்தேவியும் பலத்த சோதனைக்குள்ளானது.[மா]

## திருமலையில் தனியார்துறை சிமெந்து தொழிற்சாலை
### ஜனதிபதி அடிக்கல் நாட்டினர்

(கொழும்பு)

இலங்கையில்தனியார்துறையின் முதலாவது சிமெந்து தொழிற்சாலை திருகோணமலையில் நிறுவப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன நேற்று நாட்டிவைத்தார்.

ஜப்பான் - இலங்கை கூட்டு நிறுவனமொன்றே இத்தொழிற்சாலையை அமைக்கவுள்ளது

பதினெட்டு மாதங்களில் இத்தொழிற்சாலை கட்டிமுடிக்கப்படுமென்று தெரிவித்த பிரபல தொழிலதிபரும் இலங்கை நிறுவன அதிபருமான திரு. ஏ. வை. எஸ். ஞானம்; இதன் மூலம் திருகோணமலையைச் சேர்ந்த 500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுமென்று கூறினர். [வெ]

## கொழும்பு - யாழ். இந்துக் கல்லூரி: விறுவிறுப்பான போட்டி: வெற்றி தோல்வி இல்லை!

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக்கல்லூரிக்கும் கொழும்பு இந்துக்குமிடையே நடைபெற்ற விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டி, வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இக்கிரிக்கெட் மோதல் நேற்று முன்தினமும் நேற்றும் யாழ். இந்து மைதானத்தில் நடைபெற்றது. பெருந்திரளான

[8-ம் பக்கம் பார்க்க]

## உமையாள்புரம் சம்பவம்: இருவர் கைது!

[யாழ்ப்பாணம்]

பரந்தன் மதகடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் இருவர் இரகசியப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த ஜெயகுமாரன் என்பவரும், கனகபுரத்தைச் சேர்ந்த வீரசிங்கம் விஜயகாந்தன் என்பவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

கிளிநொச்சி பிரதான வீதியிலுள்ள உமையாள்புரம் மதகு கடந்த 4ம் திகதி வெடிவைத்து ஓரளவு தகர்க்கப்பட்டதும், கவசவாகனத்திலும், ட்ரக்கிலும் வந்த இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு ஐந்து இராணுவத்தினர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இவர்களிருவரும் பரந்தன் வை. எம். சி. ஏ.யில் தொழில் பயிற்சிபெற்றவர்கள் என்று விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. [மா]

## தெற்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டி ரத்து

டாக்கா, மார்ச். 27

பங்களாதேஷில் இன்று நடைபெறவிருந்த தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன

இப்போட்டியில் கலந்து கொள்ளவிருந்த இந்தியா, பாகிஸ்தான், நேபாளம்ஆகிய நாடுகளின் விளையாட்டுக் கோஷ்டிகள் வராததினாலேயே போட்டிகள் ரத்துச் செய்யப்

[8ம் பக்கம் பார்க்க]

உ
சிவமயம்

திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் துந்துபி வருடம் பங்குனி மாதம் 14ஆம் திகதி [28-3-83] திங்கட்கிழமை பகல் 10-00 மணி முதல் 11-00 மணிவரையுள்ள சுபவேளையில்

திரு. அ. அம்பலவாணர்

[முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி கிளை]

அவர்களால்

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

'ஐலண்ட் றேடீஸ் சென்ரர்'

என்னும் ஸ்தாபனத்தை திறந்துவைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அத்தருணம் தாங்களும் சமூகமளித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
உரிமையாளர்கள்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[பஸ் பவர் எலக்ரிக்கல்ஸ் முன்பாக] [6703]

இன்று திறப்பு விழா

கண்டிவீதி நாவற்குழியில்

ஏ. ஆர். இன்டஸ்ரிஸ்

'கல்லுடைக்கும் தொழிற்சாலை' இன்று திங்கட்கிழமை 28-3-83 காலை 10-00 மணிக்கு E. M. அன்ட்றிஸ் [அன்ட்றிஸ் & Co உரிமையாளர்] அவர்களால் திறந்துவைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்களையும், ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

6705 உரிமையாளர்.

லிங்கம் அன் கோ.,

கைதடி

ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு "வெற்றிவேல் முருகன்" பெயருடனும் உதயசூரியன் படத்துடனும் சைவ சமய ஒழுங்குகளுக்கமைய சுத்தமாக தயாரிக்கப்பட்டு, மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகின்றது.

லிங்கம் அன் கோ கற்பூரம் 55

விசேஷ தினங்களுக்கு எல்லாக் கோவில்களிலும் விற்பனவு நிலையங்கள் அமைக்கப்படும்.

விற்பனை நிலையம்:

சிறீ லிங்கம்

கைதடிச் சந்தி, கைதடி.

உரிமையாளர்:
கே. வி. சர்வசக்திவேல்.

[6704]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அண்ணா கோப்பி ஸ்தாபனத்தாரின் விளம்பர வாகனத்தில் புளியம்பொக்கணை சிவன் கோவில் பொங்கலன்று (28-3-83) கோயில் வீதியில் அமைந்துள்ள எமது தாபனத்தில் தயாரிப்புப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதோடு பரிசுக் கூப்பனைச் சேகரித்து வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் கூப்பனிலுள்ள விபரப்படி பரிசுக் கூப்பனைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். (6681)

"வொக்ஸ்வேகன்" வான் 33ஸ்ரீ - வரிசை இலக்கமுடையது. பாவனைக்குகந்த உன்னத நிலையில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. கிழமை நாட்களில் நேரடித் தொடர்பு கொள்ளவும்: நியூரோன் எலெக்ரிக்கல்ஸ், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். [6685]

Volks Wagan வான் விற்பனைக்கு உண்டு (33 ஸ்ரீ) காலை 10 மணிக்கு முன் நேரில் சந்திக்கவும். நியூ டெக் ஏஜென்ஸி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. [6667]

சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு முன்னால் வீடு கட்டக்கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. எஸ். எஸ். செல்லத்துரை (ஆசிரியர்), புகையிரத நிலையம் முன்பாக, சுன்னாகம். (6668)

யாழ். ஸ்டான்லி வீதியில், ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகில் இரண்டு பரப்பில் 2000 சதுர அடி கொண்ட சகல வசதிகளும் அடங்கிய, காலியான நிலையில் புதியவீடொன்று விற்பனைக்குண்டு. 82, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 6658

2 முநிரைக் கண்ணாடி அலுமாரிகள். 7' X 7' X 15'' நீ. இம்மானியல். 201/1, மூன்றும் குறுக்குத் தெரு, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 6655

அச்சடிக்கும் டபிள் டெமி சிலிண்டர் மெசின் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 10, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (6674]

பியர் அல்சேஸியன் பெண் நாய்க்குட்டி கிழ்ராணும் விலாசத்தில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் இல: 16, ரெம்பிள்ரோட் லேன், யாழ்ப்பாணம். 6691

12 K. W. ஜெனரேட்டர் விற்பனைக்கு 230 A C. 12 K. W. ஜெனரேட்டர், 19 H. P. டபிள் ஏயர் கூல், லிஸ்ரர் இன்ஜின் நல்ல நிலைமையில் உண்டு. வண்டியில் இணைக்கப்பட்டிருக்கிறது. தியாகு ஸ்ரோர், வடலியடைப்பு பண்டத்தரிப்பு (போஸ்ற்) 6688

இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 11 ஸ்ரீ தொடர்பிலக்க மொறிஸ் மைனர் 1000 கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. யப்பானிய கார்களுடன் மாற்றமும் செய்யலாம். விபரங்களுக்கு:- சென்திரேசா மகளிர் பாடசாலைக்குமுன், சங்கானைவீதி, அச்சுவேலி. 6694

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள C D 90 ஹொண்டா, 135 மொடல் டிராக்டரும் விற்பனைக்குண்டு! தொடர்பு:- க. செ. கணபதிப்பிள்ளை, 51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6689

லிடோ தியேட்டருக்கு அருகாமையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- ரதி வாச்வேக்ஸ் 44, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 6693

கிளச் இல்லாத Renault கார் உடன் விற்பனைக்கு உண்டு. பார்வையிடலாம். விலாசம்: Esty&Co, 27, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 6690

## தேவை

பாவித்த நல்ல நிலைமையில் 88 (Notes) உள்ள இங்கிலாந்து பியானோ ஒன்று தேவை. சுதிர், 92, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 6686

பல சரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ள 20 வயதிற்குட்பட்ட நல்லொழுக்கமுள்ள பையன் தேவை. வேலை அனுபவத்திற்குத் தக்க சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்கு:- நல்லைக்குமார் அன் கொம்பனி, 152-154, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [6672]

எல்லா வகை தையல் வேலைகளிலும் நன்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6634 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 6634

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக், ஓட்டோ எலக்றிஷன் டிப்ளோமா பயிற்சி வகுப்புகள் 05-04-1983ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology, 11-B, momsac Building, Stanley Road, Jaffna. (6665)

கஜன் தொழில்நுட்பப் பயிற்சி நடைபெறுகின்றன. வெல்டிங் [Arc and Gas) எலற்றிங், வயறிங், இயந்திரவியல் P. M. G'S ரான்ஸிஸ்ரர் தொழில் நுட்பம் கட்டிடக்கலை படம் வரைதல் ஆங்கில] உரையாடல் முதலியன. 555, காங்கேசன்துறைவீதி. நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 6700

## சேவை

கண்ணியமான கல்யாணப் பொருத்தங்களுக்கும், சிக்கனமான சிறந்த வரவேற்புபசார ஒழுங்குகளுக்கும் - மஹரி சேவிசஸ், டடன்லப் ஸ்ரோர்ஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி- 23541. (6660)

## இன்று மகா கும்பாபிஷேகம்

(சரவணை)

புங்குடுதீவு கலட்டி அருள்மிகு ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் இன்றுகாலை நடைபெறவுள்ளது.

கோப்பாய் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் பிரதம குருவாகக் கடமையாற்றுவார்.

## இன்று நடக்கும் சமயக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீ சிவகுருநாத குருபீட பரிபாலன சபையினர் ஒவ்வொரு பூரணை நாட்களிலும் (போயா) பிற்பகல் 4-30 மணிக்கு சமயக்கருத்தரங்குகளை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளனர்.

இன்று மாலை தொடங்கும் முதல் சமயக்கருத்தரங்குகளில் "தாயுமானவர் நூற்றாண்டு விழா" என்ற பொருளில் வித்துவான் கணபதிப்பிள்ளை, திரு க. சிவராமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

இக்கருத்தரங்குகள் மேற்படி குருபீட மண்டபத்தில் நடைபெறும். [சூ]

"யூனிவேசல் றெக்கோடிங் ஸ்பொட்"

திறப்புவிழா

இடம்: ஸ்ரேசனடி, கோண்டாவில்

காலம்: 28-3-1983 திங்கட்கிழமை

நேரம்: காலை 10-00 மணி முதல் 11-00 மணி வரை

உரிமையாளர்:

T. இந்திரகுமார். [6698]

அந்தியேட்டிக்கிரியை

## நினைவு கூர்தல்

28-3-83

செல்வி

கந்தசாமி ஜெயந்தி

செல்வபுரம் வடக்கு,

வவுனிக்குளம்

தோற்றம்: 21-5-62

மறைவு: 21-10-82

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி இவ்வுலக வாழ்வை நீத்த உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

தந்தை, தாய், சகோதரர். [6701]

## வடபிராந்திய போக்குவரத்துச்சபை சுற்றுலா விடுதியில் வீட்டுத்தளபாடங்கள் பொருட்கள் ஏல விற்பனைக்கு

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் யாழ்ப்பாணம்— கொழும்புத்துறை வீதி, பீச்ரோட்டில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியில் வீட்டுத்தளபாடங்கள். குளிர்சாதனப் பெட்டி, மின்சார உபகரணங்கள் உட்பட பல பெறுமதிமிக்க சாமான்கள் பகிரங்க ஏலத்தில் 16-4-83-ந் திகதியன்று காலை 9 மணி முதல் விற்பனை செய்யப்படும். பொருட்களை கொள்வனவு செய்வோர் முழுத்தொகையையும் உடன் செலுத்தி பொருட்களை மாலை 3 மணிக்கு முன்னர் அப்புறப்படுத்த வேண்டும். நுழைவுப்பணமாக ஒருவர் ரூபா 25/- செலுத்த வேண்டும். பொருட்களை 15-4-83-ந்திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிடலாம். மேலதிக விபரங்கட்கு க. தனபாலசிங்கம், பொதுசனத்தொடர்பு அதிகாரி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை. இல. 165, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 22114, 22115, 23851.

சி. கனகரத்தினம்,

தலைவர்,

தவுடை அதிகாரி,

வடபிரதேச

போக்குவரத்துச்சபை,

[6669] யாழ்ப்பாணம்.

கோண்டாவில்

# இரட்டைக் கொலை: சந்தேகநபர்கள் பிணையில்!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இரட்டைக் கொலை வழக்கில் 5 எதிரிகளும் தலா 5000 ரூபா உறுதிப்படுத்தப்பட்ட பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இப் பிணைமனு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் இ. கமலநாதன், மா. பாலசுப்பிரமணியம், ந. தர்மலிங்கம், ஆர். மகேந்திரன், பி. தவராசா ஆகியோர் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தம்பதிகள் இருவரைக் கொலைசெய்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி ஏ. தெய்வேந்திரனின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி பி. சிவலோகநாதன் ஆஜரானார்.

எதுவித சாட்சியங்களுமின்றி மூன்று மாதமாக எதிரிகள் றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சிரேஷ்ட சட்டத்தரணி கூறினார்.

இதனைத்தொடர்ந்து 5எதிரிகளையும் தலா 5000 ரூபா உறுதிப்படுத்தப்பட்ட பிணையில் செல்லும்படி உத்தரவிட்ட நீதிபதி, மன்று ஏற்கக்கூடிய நம்பிக்கையான பிணைகாரர் இருவர் பிணைக்காரராகக் கைச்சாப்பமிட வேண்டுமென்றும், ஒவ்வொரு ஞாயிற்றுக்

(7-ம் பக்கம் பார்க்க)

## இன்று உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மினிபஸ் ஊழியர்களுக்கும், பலாலி மினிபஸ் ஊழியர்களுக்கும் இடையிலான உதைபந்தாட்டம் இன்று பிற்பகல் நல்லூர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டிக்கு ச. சிவராசா மத்தியஸ்தம் வகிப்பார். [சூ]

ஏப்ரல் மாதம் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

1. எலக்றிக்கல் என்ஜினியரிங் ரூபா 450/-
2. மோட்டார் மெக்கானிசம் (Motor Mechanism) ரூபா 510/-
3. வெல்டிங் ரூபா 600/-

கட்டணம் மூன்று தவணைகளில் கட்டலாம்.

நிர்வாகி,

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்,

59, சென். பற்றிக்ஸ் றேட், யாழ்ப்பாணம். [6609]

அரிய சந்தர்ப்பம்

**Rapid Spoken English**

with

**Grammar**

(5 மாத காலத்தில் சிறந்த முறையில் பேச, எழுத, வாசிக்க பயிற்றுவிக்கப்படும்)

முழுப் பயிற்சிக்கும் ரூபா 150/- மட்டுமே,

விளக்கக்குறிப்பு இலவசமாக வழங்கப்படும்.

ஆசிரியர்: K. S. N. CUMARAN

ஆரம்பம்: 3-4-83 காலை 7-30

விபரங்கட்கு: SCIENCE HALL (வெலிங்டன் பின்புறம்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [6679]



### மணிவாக்கு

வாழ்க்கையில் அபிமானமுள்ளவர்கள் காலத்தை வீணாக்கக்கூடாது. வாழ்க்கையே காலத்தில் உண்டானதுதான்.

—அனடோல் ப்ரான்ஸ்

# கைதடி வயோதிபர் இல்லம்: சபையில்'யோகேஸ்' பிரஸ்தாபம்

(கொழும்பு)

கைதடி வயோதிபர் மடத்திலுள்ள அதிகாரிகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் அதிகாரம் இல்லை என்ற விபரத்தை யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் சமூக சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின்போது வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:-

கைதடி வயோதிபர் மடத்தில் வயோதிபர்களைச் சேர்ப்பதற்கு கொழும்புக்கு வர வேண்டியுள்ளது. அதிகாரத்தைப் பரவலாக்குவது பற்றி இங்கு நாம்பேசுகிறோம். ஆனால் கைதடி மடத்திலுள்ள அதிகாரிகளுக்கு வயோதிபர்களைச் சேர்க்க அதிகாரம் இல்லை. இந்த நிலை மாறவேண்டும்.

ஏழைகள், அநாதைகளுக்கு தற்போது வழங்கப்படும் உதவிப் பணம் போதாது. அரச ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு வழங்கப்படும் அதேவேளையில் இவர்களின் உதவிப் பணம் அதிகரிக்கப்படவில்லை. அந்த ஏழைகள் இன்றைய கஷ்டநிலையில் உயிர்வாழக்கூடியவாறு அந்த உதவித் தொகையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காட்டுப்புலம், புங்குடுதீவுப் பகுதிகளில் சுமார் 100 தொழுநோயாளிகள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகை கிடைப்பதில்லை. உதவித் தொகை பெற அவர்கள் வைத்திய அறிக்கை பெற கொழும்புக்கு வரவேண்டி இருக்கிறது. அவர்கள் ரயிலில் ஏறினால் ஏனைய பிரயாணிகள் ஏறமாட்டார்கள். வைத்திய அதிகாரிகளை ஏன் அங்கு அனுப்பி அவர்களைப் பரிசோதித்து அறிக்கை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கக்கூடாது?

அவர்களுக்கான உதவித் தொகையை அதிகரிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# நமது நோக்கு

## மட்டுநகர் மக்களின் மதாபிமானம்

பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் அமெரிக்காவில் கூடிய சர்வமத பாராளுமன்றத்தில் இந்து மதத்தின் மேன்மை பற்றி முழங்கியவர் சுவாமி விவேகானந்தர்.

இந்தியாவுக்கு வெற்றி வாகையுடன் திரும்பிய சுவாமி, "கொழும்பு தொடக்கம் அல்மோரா வரைக்கும்" என்ற நூலில் காணப்படும் உள்ளத்தை உருக்கும் பேச்சுக்களை ஆங்காங்கு நிகழ்த்தியது இன்று வரலாற்றுப் பெருமை மிகுந்த சம்பவமெனக் கருதப்படுகிறது.

எல்லா இடங்களிலும் சுவாமிகள் வழங்கியகருத்து ஒன்றேயாகும்; பாரததேசத்தின் குறிக்கோள் அதன் பழம்பெரும் சமயம்!

சமயமென்பதை அவர் விளக்கியபோது, கங்கை வைத்தான் உதாரணமாகக் கொண்டார்; இமயத்திலிருந்து கரைபுரண்டோடும் இப்புண்ணிய நதியின் போக்கை எவராலும் திசை திருப்பமுடியாது; அது எல்லாக் குறைகளையும் உண்டு ஒழிக்கவல்லது; அதேபோல் பாரதமக்களின் பரந்த பண்பாட்டுக்கு அடிப்படையாயுள்ள இந்த சமயத்தை எவராலும் அழிக்க முடியாது; அது மற்றெந்தக் குறைகளையும் விழுங்கிச் சீரணிக்கும் ஆற்றல் பெற்றது.

சமயம் சமுதாய வாழ்விலே ஊறிக் கிடக்கும் நலமிகாத சாயசஞ்சீவி.

அரசியல் அடிமையாக வாழ்ந்த இந்தியாவில் இச்சாயம் கலங்கியிருந்தது மெய்; ஆனால் முற்றும் கழரவில்லை.

கழனிகளிலும் தொழிற்சாலைகளிலும் தொழில்புரியும் ஏழைகள் மூகத்திற்களைப்பிருக்கலாம்; ஆனால் அவர்கள் உள்ளங்களில் ஆண்டவனைப் பற்றிய சிந்தனை ஆணையாவிளக்காய் மின்னுகின்றதென்றார் சுவாமிகள்.

சுதந்திர இந்தியாவின் முதற்பணி இந்த ஏழை மக்களுக்குறுதியான சமய உணர்வுக்கு புத்துயிர் அளிப்பதே? என்பது சுவாமிகளின் திடமானகொள்கை.

சமய உணர்வு, ஒரு குறிப்பிட்ட வைதீகக் கிரியைகளில் காணப்படும் காரியமல்ல; நூல்களிலும் கோவில்களிலும் பூட்டப்பட்டிருக்கும் தெய்வத்தை சாதாரண மக்களின் தினசரி தரிசனத்துக்கு அழைக்க வல்ல ரகசியம் வேண்டுமென்றே சமுதாய மேன்மட்ட பிரமுகர்கள் படித்தவர்கள் இதனைத் தங்கள் பிரத்தியேக சொத்தாக உரிமை கொண்டாடியதால் சமயரீதியில் ஒதுக்கப்பட்ட மக்கள் சமுதாயத்தின் கவிராவியாகக் காணப்படுகின்றனர்.

இந்த நிலை மகாத்மா காந்தியின் ஹரிஜன இயக்கத்தால், இந்தியாவில் மட்டுமல்ல, இலங்கையிலும் மிகப்புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனை மறுப்பவர் அரசியல் ஆதாயத்தை விரும்பும் கட்சிக்காரரே!

இருப்பினும் இந்துசமயத்தின் ஒரு முக்கிய பிரிவான சைவசித்தாந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் கண்டிப்பாளர்கள், எங்கள் பாமர மக்கள் வேறு சமயத்தைத் தழுவுவதற்குக் காரணமாகின்றனர்; சாதி வேளாளரின் கொடுமை ஒழிந்தால் மதமாற்றம் தொடர மாட்டாது. இந்து சமயம் மதமாற்றத்துக்கு இடமளிப்பதில்லை; அதன் சகிப்புத்தன்மை தப்பானவழியில் பயன்படுத்தப்படுகிறது. இன்றும் இந்நாட்டில் சைவமக்களை மதமாற்றம் செய்வதாக இங்கு வந்திருக்கும் அமெரிக்க சைவசித்தாந்த தேவாலயத்தின் சுப்பிரமுனியசுவாமி பொது மேடையில் பிரஸ்தாபித்திருக்கிறார். அன்று சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் சிவப்பயிர் வளர்த்தார். இன்று சுப்பிரமுனிய சுவாமி அதற்கு இங்கு பதிலுபகாரம் வழங்குகின்றார். மட்டுநகரில் சுவாமி நடத்திய பேருரையில் இந்த நாட்டில் சைவந்தழைக்க அதனைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்ற குறையையும் சுட்டிக்காட்டினார்.

அவருக்கு வரவேற்பளித்த அமைச்சர் இராஜதுரை அதனை ரசிக்காத காரணத்தால் அவரைப் பேசவிடாது தடுக்க முன்வந்தாரென்று செய்தி குறிப்பிடுகிறது. நல்லகாலம் சபையோர் அதற்கிணங்காதபடியால் சைவத்தின் மேன்மைமட்டுமல்ல சுவாமியின் பெருமையும் பேணப்பட்டது.

தவக்கால நற்சிந்தனை



## நேரம் நெருங்கிவிட்டது

யேசு நம் பாவங்களுக்காக தம்மையே கையளிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. எல்லாக் காலத்திலும் நாம் மனம் மாறி இறைவனோடும் அயலாரோடும் ஒப்புரவாகவேண்டும். ஆனால் சிறப்பாக தவக்காலத்தில் இதை நாம் செய்ய வேண்டும். தவக்காலம் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது. நாம் தவக்காலத்தில் மனம்மாறாவிட்டால் வேறு எக்காலத்தில் மனம் மாறப் போகிறோம்?

உண்மையை ஏற்காது, உரிமையை கொடுக்காது, அன்பை கொடுக்காது, பாவ வழியை விட்டு திரும்பாது இருக்கும்போதெல்லாம் நாம் மனம்மாற விருப்பம் இல்லாது இருக்கிறோம்.

காலம் கடக்க முன் மனம் மாறி இறைவனோடு அன்பில் ஒப்புரவாகுவோம். மற்றவர்களையும் தீயவழியை விட்டு மனம்மாற உதவிசெய்வோம்.

அருட்செல்வன் ம. ரூபன்

# பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவு

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவு" என்ற விடயம் பற்றிய கலந்துரையாடலில், பரியோவான் கல்லூரி அதிபர் வழங்கிய குறிப்புகள் சிந்தனைக்குரியவை.

காலத்துக்குக்காலம் நடைபெறும் சாதாரண சந்திப்பு என்று இக்கூட்டத்தைக் கருதுவது சரியல்ல.

இன்று யாழ்ப்பாணத்தில் இவ்விடயம் இரு பகுதியினருக்கும் பெருந்தலையிடியைக் கொடுத்துவருகிறது.

யாழ்ப்பாணம் மட்டுந்தானா?

தெற்கிலே என்ன பேசிக் கொள்கிறார்கள்?

அங்கு பொலிஸாரில் குறைகூற விரும்புமெவருக்கும் ஒரு இலேசான வழியுண்டு.

"யாழ்ப்பாணத்தில் கொலையும் அடியுமே பொலிஸாரின் கதி; அதற்குப் பழிவாங்கவா இங்குள்ளவர்களுக்கு அட்டூழியம் புரிகிறீர்கள்?" என்றொரு வாசகம் பத்திரிகையில் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் இன்றைய நிலை அவலமானதென்பதை அதிபர் ஆனந்தராஜன் நன்கு விளக்கியிருக்கிறார்.

ஆட்சியில் அவநம்பிக்கை கொண்ட மக்கள் பொலிஸாரைஎதிர்ப்பதுஇயற்கை.

அரசின் காவற்காரர் என்ற பட்டம் எப்போதும் நன்மையளிக்காது; சிறப்பாக அரசு அதிகரிக்கும் குற்றங்களை அடக்க முயலும்போது தீவிரமான, சிலவேளைகளில் கொடூரமான கட்டளைகளைப் பிறப்பிக்கிறது.

இவற்றைச் செயற்படுத்தும் பொறுப்பு பொலிஸாருக்குரியது; அதற்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைக்கும் தீங்கு விளைவிக்கும் செயல்களைச் சிந்தனைத்திறனாலே தவிர்க்கும் ஆற்றல் இச்சிக்கலான கட்டத்தில் அவசியம்.

ஒன்பது தமிழ் உயிர்களுக்கு உலைவைத்த சம்பவத்துக்குப் பொறுப்பென்று கருதப்பட்ட பொலிஸ் அதிகாரி பதவி உயர்ச்சி பெற்றதும்; மூன்று மேல்நீதிமன்ற நீதியரசர்கள் ஏகமனதாகக் குற்றவாளியாகக் கண்ட பொலிஸ் அதிபரின் குற்றப்பணத்தை அமைச்சரவை கொடுக்க முன்வந்ததோடு, அவருக்கும் பதவி உயர்வு வழங்கியதும் அரசாங்கமும் பொலிசாரின் சட்ட விரோதமான செயல்களை அங்கீகரிக்குதென்ற அபிப்பிராயத்தை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிறது.

இந்த நிலைமையில் பொலிஸ்- பொதுமக்கள் உறவு எவ்வாறு செழிக்கும்; பொலிசாரின் கடின சேவையை நிச்சயம் பொது மக்கள் உணரவேண்டும். தாங்கள் மக்களின் பாதுகாவலர்கள் என்ற கருத்து மேலோங்கும் வகையில் பொலிசார்; சாமர்த்தியமாக நடந்துகொள்வது அவசியம்.

## பின்தங்கிய பகுதிகளுக்கான

# 15 வீத சலுகை தொடர்ந்து வேண்டும்

## திருமலை எம். பி. வலியுறுத்து

(கொழும்பு)

திறமைக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதை மறுக்கவில்லை. அதேவேளையில் வசதி குறைந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் 15 வீத விசேஷ சலுகை தொடர்ந்து இருக்கவேண்டும் என்று திருகோணமலை எம்.பி. திரு ஆர். சம்பந்தன் உயர் கல்வியமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின்போது கூறினார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் தற்போது கடைப்பிடிக்கப் பட்டுவரும் பின்தங்கிய பகுதிகளுக்கு 15 வீதம் என்பது தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் படவேண்டும்.

இந்த அனுமதிமுறை பின்தங்கிய பகுதி மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கத்தைக் கொடுக்கிறது.

திருகோணமலையைப் போன்ற பல பகுதிகளில் வாழும் மாணவர்களுக்குப் போதிய கல்வி வசதி கிடைப்பதில்லை. கல்வி வசதியைப் பொறுத்தவரை அப்பகுதிகள் தொடர்ந்தும் பின்தங்கியே இருக்கின்றன. இந்நிலையில் இந்த மாணவருக்கு 15% பின்தங்கிய பிரதேச அனுமதி முறை பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது என்று திரு. சம்பந்தன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"திறமைக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதை நாம் மறுக்கவில்லை. அதே வேளையில் கல்வி வசதி குறை

(8ம் பக்கம் பார்க்க)

## வண்ணை சிவன் தீர்த்தம் இன்று

# கல்யாணசுந்தரருக்குரிய விரததினம் பங்குனிஉத்திரம்

வசந்தகாலத்துக்கு முன்னோடியாக பங்குனி மாதத்தில் சிவாலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் பங்குனி உத்தரத்தைப் பிரதானமாகக் கொண்டே நடைபெறும். உத்திரத்துக்கு முதல்நாளோ உத்திரத்தன்றோ அல்லது அதன் மற்றநாளோ தேர்த்திருவிழா நிகழ்ந்தாலும் அத்திருவிழா பங்குனி உத்திரத்தைக் கொண்டு நடைபெறும் விழாவேயாகும்.

ஒன்பது சிவவிரதங்களுள் ஒன்றாகிய கல்யாணசுந்தர விரததினமே பங்குனி உத்தர நட்சத்திர தினமாகும். திருவாதிரை விரதத்திற்கு நடராஜா பிரதானமூர்த்தி ஆவதுபோல பங்குனி உத்திரத்தை முன்னிட்டு நடைபெறும் விழாவிற்குப் பிரதான மூர்த்தியாகத் தேரில் எழுந்தருளிக் காட்சி கொடுத்தருள்பவர் தியாகராஜாவாகிய சோமஸ்கந்த மூர்த்தியாவர். சோமஸ்கந்தருக்கு இருந்தாடும் பெருமான் என்றும், அஜபா நடேசர் என்றும் தனிச்சிறப்பான பெயர்கள் உண்டு. சத், சித், ஆனந்த மூர்த்தியாக உமையுடனும் ஸ்கந்தருடனும் விளங்கும் ராஜ மூர்த்தமாகிய சோமஸ்கந்த மூர்த்தி திருவருளாகிய சக்தியின் அருள் விசேடமாகக் கிடைக்க வேண்டும் என்னும் பெரும் கருணையினால் உபயசக்தி சமேதராக எழுந்தருள்வார். உபயசக்திகளில் ஒரு சக்தி சுவாமிக்குப் பக்கத்தில் இருப்ப மற்ற சக்தி தனித்தேரில் வருவது அம்பிகையைத் தனியே வழிபட்டு அருள்பெற வாய்ப்பாக இருக்கும்.

சோமாஸ்கந்த மூர்த்தியாகிய தியாகராஜப்பெருமானின் தனிஉரிமைத் தலமாகிய திருவாரூரைத் துதிக்கும் புராணகாரர், மகிழ்வருளும் தியாகேசவிளல் போற்றி என்கின்றார்.

கல்யாணசுந்தர விரததினமாகிய பங்குனி உத்திரத்தில் கோலாகலமான பெருவிழாக்களைக்கண்டு தரிசித்து வணங்கி இன்புறுவோம். (அ)

தி. பொன்னம்பலவாணர்




சுவிஸ்ஸோட்டேலில் பங்காளியாகி உங்கள் பணத்திற்கு 100% வரிச் சலுகை பெறுங்கள்!

ஒவ்வொன்றும் ரூ. 10/- முகப்பெறுமதி கொண்ட

16,000,000 சாதாரண பங்குகள், முழுக் கொடுப்பனவும் பெற்று

ஒவ்வொன்றும் ரூ. 10/- முகப்பெறுமதி கொண்ட

16,000,000 சாதாரண பங்குகள், முழுக் கொடுப்பனவும் பெற்று

# பொதுமக்களுக்கு வழங்கல்.

## பொதுத் தகவல்கள்

சுவிஸ்ஸோட்டேல், சர்வதேசப் புகழ்பெற்ற ஒரு 5 நட்சத்திர சுப்பர் லக்ஷறி ஹோட்டல் தொடராகும். இது இப்பொழுது இலங்கையிலும் நிர்மாணிக்கப்படவுள்ளது. நீங்கள் இந்த ஹோட்டலில் பங்காளியாக, அரியதோர் சந்தர்ப்பம் இப்பொழுது அளிக்கப்படுகின்றது. உங்கள் முதலீட்டுக்கு வரிச்சலுகையுண்டு. இப்படி முதலீடு செய்வதால் உங்கள் பணத்தை ஓர் பாதுகாப்பான வழியில் பயன்படுத்தலாம். அத்துடன் வரி செலுத்த வேண்டிய கவலையுமில்லை. எனவே, இந்த ஹோட்டலில் முதலீடு செய்து, உங்கள் எதிர்கால நிதி நிலைமையை உறுதிப்படுத்துங்கள்.

பங்குகள் வழங்கல்களுக்கான விண்ணப்பப் பட்டியல், 1983ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் திகதி காலை 9-00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் (ஏற்கனவே நிறுத்தப்படாவிடின்) 1983, ஜூலை மாதம் 1ம் திகதி மாலை 4-30 மணிக்கு முடிவுறும்.

## வெளிநாட்டு ஒத்துழைப்பாளர்கள்:

சுவிஸ் ஏயர் நெஸ்லே ஹொட்டேல்ஸ்லிமிட். நிறுவனம், உலகில் மிகவும் பிரபல்யமான சர்வதேசக் கம்பனிகளான சுவிஸ் ஏயரும் (சுவிற்சர்லாந்தின் தேசிய விமான சேவை), நெஸ்லே லிமிட். (ஒரு உலகளாவிய உணவுப் பொருள் தயாரிக்கும் நிறுவனம்)உம் ஒன்றிணைந்து நிறுவிய ஒரு ஹோட்டல் முகாமைத்துவக் கம்பனியாகும். இந்தக் கம்பனிதான் சுவிஸ்ஸோட்டேல் குறுாப்பின் முகாமையாளர்களாகச்செயல்புரிகின்றது. பல சார்ட்டர் விமான சேவைகளிலும், பிரயாண முகவர்களாகவும் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளின் சொந்தக்காரர்களும் உலகளாவிய 170 நகரங்களில் 200க்கும் மேற்பட்ட விற்பனை அலுவலகங்களைக் கொண்டவர்களுமான முதலீட்டுச் சிறப்புமிக்க நிறுவனம் சுவிஸ் ஏயர் ஆகும்.

நெஸ்லே லிமிட். நிறுவனம், சிறந்த ஆலோசனைகளை வழங்குவதோடு, வகன் லிற்ஸ்ருவறிஸ்ம் (140 நாடுகளில் 1000 பிரயாண முகவர் நிலையங்கள்) நிறுவனத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்பும் கொண்டுள்ளது. மேலும், அமெரிக்காவிலுள்ள ஸ்ரப்பர் கோர்ப்பறேஷன் (20 ஹோட்டல்களையும் மற்றும் நியூயோர்க், சிக்காகோ, வோஷிங்டன் போன்ற நகரங்களில் விற்பனை அலுவலகங்களையும் கொண்ட நிறுவனம், உடனும் மிகவும் சடுபாடு நெஸ்லே லிமிட். நிறுவனத்திற்குண்டு.

## பணிப்பாளர்கள்:

டொன் புத்ததாஸ வெத்தசிங்ஹ,
''அனோமா'', கொஸ்வத்த வீதி,
நாவல, இராஜகிரிய.
(கம்பனிப் பணிப்பாளர்)

தலைவர்:
எலெக்ரோ குறூப் கம்பனிகள்!
எலெக்ரோ பிளாஸ்ரிக்ஸ் லிமிட்.
எலெக்ரோ சேல்ஸ் லிமிட்.,

பணிப்பாளர்:
போர்மோஸா இன்டஸ்ற்றீஸ் லிமிட். (F.T.Z.)
இன்டஸ்ற்றியல் பிறுன்ஸ் லிமிட்.
றீஜென்ஸி கார்மென்ஸ் லிமிட்.
ஓஸெனிக்ஸ் டிரெவல்ஸ் லிமிட்.
மொறக்கல எஸ்ற்ரேற் கம்பனி.

காமினி ஹேமன் வெத்தசிங்ஹ,
147/1, சேனநாயக அவெனியூ,
நாவல.
(கம்பனிப் பணிப்பாளர்)

உப தலைவர்:
எலெக்ரோ குறூப் கம்பனிகள்.

பணிப்பாளர்:
இன்டஸ்ற்றியல் பிறுன்ஸ் லிமிட்.,
G.W.கொன்ஸ்றக்ஷன் கம்பனி,
G.W.ஹொட்டேல்ஸ் லிமிட்.

ஜோன் ஏட்லி றஸல் பெரேரா,
27, உயன வீதி, மொறட்டுவ.
(சிரேஷ்ட சட்டத்தரணி)

பணிப்பாளர்:
சிலோன் பேப்பர் ஸச்ஸ் லிமிட்.,
மைக்றிஸ் இன்டஸ்ற்றீஸ் லிமிட்.,
கொன்ஸொலிடேட்டெட் பக்கேஜிங் இன்டஸ்ற்றீஸ்
ஆஷா ஏஜென்ஸீஸ் லிமிட்.,
கிளப் ஓஸெனிக் லிமிட்.

டாக். கந்தசாமி அருணசலம்,
ஸ்ரேசன் வீதி, கொழும்பு-6.
(மருத்துவர்)

தலைவர் / பணிப்பாளர்:
பேர்ள் ஐலன்ட் புறடக்ஸ்,
எலெக்ரோ பைப் இன்டஸ்ற்றீஸ் லிமிட்.

ஹுஸெயின் ஸாப் ஹஷீம்,
நிம்பிரிகஸ்ஸாய வீதி, கொழும்பு.
(கம்பனிப் பணிப்பாளர்)

தலைவர்:
மல்ஸிப்ஸ் சிலோன் லிமிட்.,
மல்ஸிப்ஸ் டிரவெல்ஸ் லிமிட்.,
சிலோன் ஓஸெனிக்ஸ் லிமிட்.

திருமதி ஷிருணி அனோமா டுள்ளாள,
கொஸ்வத்த வீதி,
நாவல, ராஜகிரிய.
(கம்பனிப் பணிப்பாளர்)

பணிப்பாளர்:
எலெக்ரோ குறூப் கம்பனிகள்.

ஆர்தர் எட்வர்ட் தோமஸ் எல்லாவெள,
14, கார்வில் பிளேஸ், கொழும்பு-3.
(கம்பனிப் பணிப்பாளர்)

பணிப்பாளர்:
மினேர்வா லப்பிடறீஸ் லிமிட்டெட்,
மிடாஸ் ஜுவலெறி இன்ரர்நெஷனல் லிமிட்டெட்.

மொகமட் ஷெரீப் மொகமட் யஸீன் மரைக்கார்,
மக்ளியோட் வீதி, கொழும்பு.
(கம்பனிப் பணிப்பாளர்)

பணிப்பாளர்:
புறெஸ்ற்ரெயார் லிமிட்டெட்,

விஸ்வநாதர் சின்னத்தம்பி முத்துவேலு,
60/1, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு-7.
(கம்பனிச் செயலாளர்)

## திட்டமும், அமைவிடமும்:

இந்த ஹோட்டல், எலெக்ரோ குறூப் கம்பனிகளின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் நிறுவப்படும். இது, புதிய பாராளுமன்றத் தொடரின் அண்மையிலுள்ளது. இதற்கான 10 ஏக்கர் காணியில் இதுவரை 6 ஏக்கர் நிலம் ஹோட்டலுக்காக மணலால் நிரப்பப்பட்டு சுமார் 10 அடி உயர்த்தப்பட்டுள்ளது. மற்றைய 4 ஏக்கர் நிலம் கலாச்சார நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தினூடாகப் பாயும் டியவன்ன ஓயாவோடு ஓர் கூரைகொண்ட மரத்திலாலான பாலத்தினால்ஹோட்டலோடு இணைக்கப்படும்.

## வரிச்சலுகைகள்:

பங்குதாரர்களும், கம்பனியும் கீழ்க்காணும் சலுகைகள் / நிவாரணங்கள் / நன்மைகளைப் பெறமுடியும்.

### பங்குதாரர்களுக்கு:

1. 100% முதலீட்டு நிவாரணம்
2. பங்கு இலாபத்திற்கு வரி விடுமுறை
3. பங்கு இலாபங்களுக்கு நிறுத்தி வைத்த வரிவிலக்கு
4. கம்பனிகள் பெறும் பங்கு இலாபங்களுக்கு வரி இல்லை.
5. மூலதன இலாபங்களுக்கு வரி விலக்கு

### கம்பனிக்கு:

1. 10 வருட வரி விடுமுறை
2. கம்பனிக்குக் குறைந்த வரி விகிதம்

பணிப்பாளர்,
எலெக்ரோ ஹொளிடே றிஸோர்ட்ஸ் லிமிட்.,
C/o மேர்ச்சென்ட் பாங்க் ஒவ் ஸ்ரீலங்கா லிமிட்.,
411, காலி வீதி, கொழும்பு-3.

அன்புடையீர்,

பங்கீடு வழங்குகை அடங்கிய முன் விவரணம் ஒன்றையும், பங்கீடு விண்ணப்படிவம்/வங்களையும் தயவு செய்து அனுப்பி வைக்கவும்.

பெயர்: ..........................................
..........................................
விலாசம்: ..........................................
..........................................
..........................................

# எலெக்ரோ ஹொளிடே றிஸோர்ட்ஸ் லிமிட்டெட்.

1032, கோட்டே வீதி, வெலிக்கட, ராஜகிரிய.

# "யாழ். பல்கலைக்கழக விடுதி வசதிக்கு 'பட்ஜட்டில்' நிதி ஒதுக்கவேண்டும்" — 'அமிர்'

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிக்காக வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வலியுறுத்தினார். உயர் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை ஆய்வில் கலந்துகொண்டு திரு. அமிர்தலிங்கம் பேசினார்.

அவர் கூறியதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கென கிளிநொச்சியில் காணி கூட ஒதுக்கப்பட்டுள்ளது. பொறியியல் பீடம் நிறுவுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆனால் இதெல்லாம் நடந்து பல நாட்கள் கடந்தபோதிலும் இன்னும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஒரே ஒரு மாணவர் விடுதியே இருக்கிறது. அதுவும் மாணவர்களுக்கென விடுதி கிடையாது. இதனாலேயே அங்கு பல பிரச்னைகள் ஏற்படுகின்றன.

இலங்கையில் தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பிரதானமான பல்கலைக்கழகமான யாழ். பல்கலைக்கழகத்தில் இவ்வாறு மாணவர்களுக்கு போதிய வசதி இல்லாவிட்டால் மாணவர்கள் எவ்வாறு கல்வியைத் தொடரமுடியும்.

எனவே இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு பட்ஜட்டிலாவது இதற்கு நிதி ஒதுக்கவேண்டும்.

மட்டக்களப்பு பல்கலைக்கழக வளாகம் போதிய கட்டிடம் மற்றும் வசதிகள் இன்றி இருக்கின்றது. இதனை அரசு உடன் கவனிக்கவேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரச்னை, கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரி தீர்ந்து விட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமாணவர்பிரச்னை தீரவில்லை. இந்த மாணவர்களுக்காக ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் அனுதாபம் தெரிவித்து வகுப்புகளைப் பகிஷ்கரிக்கலாம்.

ஜெயவர்த்தனபுர மாணவர்களின் பிரச்னை முதலில் கிராமத்தவர்களுக்கும் மாணவர்களுக்குமாக ஆரம்பித்துப்பின் பொலிசாருக்கும் மாணவர்களுக்குமிடையே நடைபெற்று பல மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சிலருக்குக் காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஏது எப்படியிருந்தாலும் மாணவர் பிரச்னையை அதிகாரிகள் கௌரவப் பிரச்னையாகக் கருதக்கூடாது.

## இன்றுவெளியீட்டுவிழா 'காற்றில் கலக்கும் பெரு மூச்சுகள்'

(யாழ்ப்பாணம்)

பிரபல எழுத்தாளர் "செங்கை ஆழியானின்" காற்றில் கலக்கும் பெருமூச்சுகள் நூல் வெளியீட்டு விழா இன்றுமாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது. 'சாந்தி' வெளியீட்டாளரின் இந்த நூல் பெருமளவு செலவில் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடப் பேராசிரியர் என். சிவஞானசுந்தரம் (நந்தி) இவ்விழாவுக்குத் தலைமை தாங்குகிறார்.

## மரவேலைப் பயிற்சிப் பாடசாலை

[புலோலி]

யாழ். மாவட்டத்திலுள்ள மூன்று இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகளிலும் பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள். இப்பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட சிறு கைத்தொழில் உதவிப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் யாழ். பிரதான வீதியிலும், மானிப்பாய் வீதியிலும், சுன்னாகம் மின்சார நிலைய வீதியிலும் மூன்று இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

இவ்வியந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு ஒரு வருடகால பயிற்சியளிக்கப்படுகின்றது. பயிற்சிக் காலங்களில் நாள் ஒன்றுக்கு உதவிப்பணமாக 5 ரூபாவும் இலாபத்தில் 80 வீதமும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுவதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

(க)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மேலும் ஒரு பாடசாலை பஸ்சேவை

[வண்ணார்பண்ணை]

பருத்தித்துறைப் பிரதான வீதிவழியாக மேலும் ஒரு பாடசாலை பஸ்சேவை நடைபெறவிருக்கிறது.

அச்சுவேலி, ஆவரங்கால், இறுப்பிட்டி, புத்தூர் ஆகிய பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணம் வரை செல்லும் பாடசாலை மாணவர்களது வசதியை முன்னிட்டு இப்புதிய சேவை அச்சுவேலியிலிருந்து நடைபெறவிருக்கிறது.

இச்சேவை மிகவிரைவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபைச் செயலாற்று முகாமையாளர் திரு க. மயில்வாகனம் ஆவரங்கால் விவேகானந்த கிராமஅபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு இ. மயில்வாகனத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். "உங்கள் வேண்டுதலின்படி அச்சுவேலியிலிருந்து யாழ்ப்பாணம் வரை புதிய பாடசாலை பஸ்சேவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மிகவிரைவில் இச்சேவை நடைபெறும்." என்று செயலாற்று முகாமையாளர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

[அ]

## இலவச பயிற்சி

[புலோலி]

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச்சங்கம் பாடசாலையை விட்டுவெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கென நடாத்தவுள்ள இலவசத் தமிழ்ச் சுருக்கெழுத்துப்பயிற்சி வகுப்புஆரம்பவிழா இம்மாதம் 29ம் திகதி வல்வெட்டித்துறை மக்கள்வங்கி முகாமையாளரும் ஊழியர் நலன் புரிச்சங்கத் தலைவருமான திரு எஸ். சேனாதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.


வட பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் திரு என். எஸ். பி. ஆனந்தன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி இவ்இலவச தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைப்பார்.

இவ் இலவச தமிழ்சுருக்கெழுத்து வகுப்பில் பயிற்சி பெறுவதற்கு 55 இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனரென்று சங்கச்செயலாளர் திரு பீ. அச்சுதம்பிள்ளை தெரிவித்தார்.

(ந)

Nestlé®

**நெஸ்லே லங்கா லிமிட்டெட்**



முன்னதாகவே முடிவுறுத்தப்பட்ட ஆக்கப் பொருள்களாக இறக்குமதி செய்யப்பட்ட பதனிடா உள்ளூர் மூலப் பொருள்களிலிருந்து பாலும் பால்சார் பொருள்களும் உற்பத்தி செய்யும் பணியில் நெஸ்லே தொழிற்பாடு இலங்கையிலே திருப்பிவிடப்பட்டிருக்கிறது.

நாட்டிற்கு முக்கியமாக வேண்டுவதான உணவுப் பொருள் ஒன்றினுக்கு வெளிநாட்டு இறக்குமதிகளை நம்பியிருக்கும் அவலநிலையினைக் குறைத்துக்கொள்ளும் வகையில் ஈடுபாடு காட்டுகின்றதொரு முதலீடு இதுவாகும்.

1983-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 29-ம் தேதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணிவரை கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக, 1983-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ம் தேதி புதன்கிழமையன்று, முதலாவது இடைக்காலப் பங்கொதுக்கல் நடைபெறும்.

1983-ம் ஆண்டுமார்ச்சு மாதம் 29-ம் தேதிவரை ஏலவே விண்ணப்பித்த விண்ணப்பகாரர் 1982/83 வரிமதிப்பு ஆண்டுக்கான முதலீட்டு நிவாரணம் பெற்றுக்கொள்ளத் தக்கபடி உதவுவதற்காகவே முதலாவது இடைக்காலப் பங்கொதுக்கல் நடாத்தப்படுகின்றது.

இங்ஙனமாக நடாத்தப்படும் இடைக்காலப் பங்கொதுக்கல் காரணமாக இதிலே பங்குகொள்ளும் சிறிய பங்காளர்கள் எவர்க்கும் தங்குதடை எதுவும் ஏற்படாது.

விண்ணப்ப அட்டவணை 1983-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29-ம் தேதி வெள்ளிக்கிழமைவரை பதிவு செய்ய இடமளிப்பதாயிருக்கும்.

பங்கு வழங்கப்படுதல் பற்றி மேலும் விவரங்கள் அறிய விரும்புவோர் விபரங்களை மட்டுமன்றி விபரமஞ்சரி, விண்ணப்பப் பத்திரங்கள் ஆகியவற்றையும் பின் காட்டப்படுகின்ற கொழும்புத் தரகர் சங்கத்தவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தரகர் விபரம் வருமாறு—

போர்ப்ஸ் அண்டு உவாக்கர் லிமிற்றெட்.,
(தொடக்கி நடத்தும் தரகர்)
அ. பெ. இல. 60, கொழும்பு 2.

பார்ட்லீற் அண்டு கொம்பனி லிமிற்றெட்,
அ. பெ. இல. 9, கொழும்பு 1.

ஜோன் கீல்ஸ் லிமிற்றெப்,
அ. பெ. இல. 76, கொழும்பு.

சோமவீல் அண்டு கொம்பனி லிமிற்றெட்
அ. பெ. இல. 146, கொழும்பு.

ஜோர்ஜ் ஸ்ருவாட் அண்டு கொம்பனி லிமிற்றெட்,
அ. பெ. இல. 151. கொழும்பு.

அல்லது பின்காட்டப்படும் வங்கிகளிலிருந்து

இலங்கை வங்கியிலும் அதன் கிளைகள் எவற்றிலும்
மக்கள் வங்கியிலும் அதன் கிளைகள் எவற்றிலும்
ஹற்றன் நாஷனல் வங்கி லிமிற்றெட்டிலும் அதன் கிளைகள் எவற்றிலும்
கிறிண்ட்லி வங்கியிலும் அதன் கிளைகள் எவற்றிலும்
சிற்றிபாங் என். ஏ., ஐஸ்லண்ட் கட்டடம், கொழும்பு 3.
அம்ஸ்ரடாம்-றொற்றடாம் வங்கி, சதாம் வீதி, கொழும்பு 1.
யூரேப்பியன் ஏசியன் வங்கி, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

அல்லது கொம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்திலிருந்து

**நெஸ்லே லங்கா லிமிட்டெட்**

440, டீ. பீ. ஜயா மாவத்தை, (டாளி வீதி) கொழும்பு 10.

6697

# இந்தியாவில் மும்மொழித்திட்ட அவசியம் பிரதமர் இந்திராவால் வலியுறுத்தப்படுகிறது!

## பெண்கள், குழந்தைகள் கல்வியிலும் கூடுதல் அக்கறை வேண்டுமென்கிறார்!

புதுடில்லி, மார்ச், 27

இந்தியாவில் மும்மொழித் திட்டம் அமுல் செய்யப்பட வேண்டிய தன் அவசியத்தை பிரதமர் திருமதி இந்திரா காந்தி வலியுறுத்தியுள்ளார். புதுடில்லியில் தேசிய ஆசிரியர்கள் கூட்டமொன்றில் பிரதமர் இந்திரா நேற்றுக் கலந்து கொண்டார். அங்கு அவர் பேசுகையில் மும்மொழித் திட்டம்பற்றியும் அவர் குறிபிட்டார்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி மேலும் கூறியதாவது:- ''ஒருவர் நிச்சயம் அவரது தாய் மொழியை நன்கு அறிந்திருக்கவேண்டும். அதேவேளை ஏனைய பாரத மொழிகளையும் இந்தியர்கள் அறிந்திருக்க வேண்டும். இதன்மூலம் சகல மாநிலங்களைச் சேர்ந்தவர்களுடனும் பாரத மக்கள் மொழிப் பிரச்னையின்றித் தொடர்புகளை ஏற்படுத்தலாம். ஆகையினால் இம்மும்மொழிப் பயிற்சித் திட்டம் சகல பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இந்தியப் பெண்களில் அநேகர் கல்வியைப் புறக்கணித்து வருகின்றனர். அவர்கள் கட்டாயமாகக் கல்வியில் மேம்பாடடையவேண்டும். கிராமப்புறங்களில் பல குழந்தைகள் கல்வியில் அறிவுடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதைப் பூரணமாகத் தொடர முடிவதில்லை. காரணம் அவர்கள் தமது குடும்பப் பொருளாதார நிலையையும் கவனிக்க வேண்டியுள்ளது.

பல குழந்தைகள் தமது பெற்றோரின் வேலைகளில் பங்கு கொண்டு அவர்களுடன் உழைக்கின்றனர். எனவே அக்குழந்தைகளின் வேலை நேரம் தவிர்ந்த வேளைகளில் கல்வியை அவர்கள் பெறும் வகையில் பாடத் திட்டங்கள் அமைக்கப் படவேண்டும்'' என்றார்.

பாரதப் பிரதமர் திருமதி காந்திமேலும் பேசுகையில், சிறுவர் பாலர் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் முக்கிய மொழியாகப் போதிக்கப்படுவதாகவும், எனவே இந்தியாவிலும் ஆங்கிலம் மிக அவசியமானதொன்று என்றார்.

மும்மொழித் திட்டமானது இந்தியாவின் தேசிய மொழியான ஹிந்தியையும், ஆங்கிலத்தையும் மற்றும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் தாய் மொழியையும் உள்ளடக்கியதாகும். [இ]

# ''பாகிஸ்தானுக்கு ஆயுத விநியோகம்: ஆசியாவில்ஆயுதப்போட்டிக்குவித்திடுகிறது''

இஸ்லாமபாத், மார்ச் 27

''பாகிஸ்தானுக்கு விநியோகம் செய்யும் நவீன ரக ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள் சம்பந்தமான பட்டியலை அமெரிக்க நிர்வாகம் உத்தியோகபூர்வமாக அங்கீகரித்துள்ளது'' என்று பாகிஸ்தானிய பத்திரிகையான ''முஸ்லீம்'' செய்தி வெளியிட்டுள்ளது.

'எஃப்-16' ரக குண்டுவீச்சு விமானங்களுக்கான உடனடி முன்னறிவித்தல்தரும் அமைப்புக்களும் இவற்றுள் அடங்குகின்றன. 'எலக்ரோனிக்' சாதனங்கள் பொருத்தப்படாமையால் இந்த 'எஃப்-16' ரகவிமானங்களை பாகிஸ்தான் முதலில் ஏற்க மறுத்திருந்தது தெரிந்ததே.

ஆனாலும் ஜனாதிபதி ஸியாவுல் ஹக்கின் அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று, இந்தக் குண்டுவீச்சு விமானத்தின் தாக்குதல்வல்லமையைமேலும் அதிகரிக்கக்கூடிய 'எலக்ட்ரோனிக்' சாதனங்களைப்பொருத்த அமெரிக்கா முன்வந்தது.

ஜனவரியில் முதல் ஆறுவிமானங்களுக்கு இந்த அமைப்புப் பொருத்தப்பட்டது. இவை பாகிஸ்தானிய ராணுவத் தளமான சர்கொடாவில் இன்றுள்ளன.

''அமெரிக்காவின் ஆயுத விநியோகத்தை நியாயப் படுத்துமுகமாக அமெரிக்காவின் உதவி ராஜாங்க செயலாளர் திரு ஹோவார்ட் ஹாஃபர் ''பாகிஸ்தான் தனது சொந்த தற்பாதுகாப்பை வலுப்படுத்த அதற்கு நவீன ஆயுதங்கள் அவசரமாகத் தேவையாக உள்ளது என்றும் அவற்றை விநியோகம் செய்ய அமெரிக்காவுக்கும் சிலகடப்பாடுகள் உண்டு'' என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அடுத்த நிதி ஆண்டில் 525 மில்லியன் டாலர் பெறுமதியான ராணுவ-பொருளாதார உதவியை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கத் திட்டமிட்டுள்ளது. அதேவேளையில் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளுக்குக்கொடுக்கத்திட்டமிடப்பட்டுள்ள மொத்தத் தொகை 465 மில்லியன் டாலர்களாம்'' என்றும் மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.

'எஃப்-16' ரக விமானங்களைத் தவிர நவீன ஏவுகணைகள் எம்-48 ரக, 100 டாங்கிகள், ஹெலிக்கொப்டர்கள், மற்றும் ஆயுதங்களையும் அமெரிக்கா அளிக்கவுள்ளது. அமெரிக்காவின் இந்த ஆயுத விநியோகம் உபகண்டத்தின் பேராபாய சமநிலையைச் சீர்குலைத்துவிடுவதுடன், ஆசியாவில் ஆயுதப் போட்டியையும் தூண்டிவிடுவதாகவும் உள்ளது'' என்றும் இப்பத்திரிகை எழுதுகிறது.

# பிரதமர் இந்திரா காந்தி தமிழகம் வருகிறார்!

## வரட்சிநிலைபரங்களைப் பார்வையிடுவார்!

சென்னை, மார்ச், 27

பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி இன்று சென்னை வருகிறார். தமிழ்நாட்டின் நிலவும் கடும் வரட்சி நிலைபரங்களைப் பார்வையிடவே இந்த விஜயம் அவரால் மேற்கொள்ளப்படுகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை, வந்தவாசி ஆகிய இடங்களைத் திருமதி இந்திரா காந்தி சென்னை வந்ததும் சென்று பார்வையிடுவார். இந்த இடங்களே வரட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஆளுநர் லெப்டினன்டி ஜெனரல் எல். எம். குரானா, முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் ஆகியோர் பிரதமர் இந்திராவுடன் மேற் குறிப்பிட்ட இடங்களைச் சென்று பார்வையிடுவார்.

விசேட விமானப்படை விமானம் ஒன்றிலேயே பிரதமர் இந்திரா புதுடில்லியிலிருந்து சென்னை வருகிறார். பின்னர் சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அவர் செல்வார்.

மீண்டும் அவர் அவ்விடங்களிலிருந்து சென்னை திரும்பி மோட்டார் காரில் சென்னை நகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டிற்குள்ளான இடங்களான ஆயிரம் விளக்கு, மேற்கு மாம்பழம் ஆகிய பகுதிகளைப் பார்வையிடுவார். மாலையில் அவர் புதுடில்லி திரும்புவார். [கி]

# இந்தியாவுக்கு கடல் ஆராய்ச்சிக் கப்பல்!

திருவனந்தபுரம், மார்ச், 27

மேற்கு ஜெர்மனியில் தயாரான பெரும் ஆராய்ச்சிக் கப்பல் ஒன்றை இந்தியா பெற்றுள்ளது. 'சாகர்கன்னியா' என்று இக்கப்பலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

சுமார் 8 கோடி ரூபா செலவில் இக்கப்பல் சொல்லனவு செய்யப்பட்டது. உலகிலுள்ள பெரும் கடல் ஆராய்ச்சிக் கப்பல்களில் இதுவும் ஒன்றாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

'சாகர்கன்னியா' கப்பலை இந்தியாவுக்குக் கையளிக்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை கொச்சினில் நடைபெற்றது. கடலிலுள்ள உலோகப் பொருட்கள்பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதே இக்கப்பலின் முக்கிய பணியாக இருக்கும்.

இக்கப்பலிலுள்ள வசதிகளைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் கடல் ஆராய்ச்சிபற்றிய வரைபடங்களை வரையக்கூடியதாக இருக்கும். அத்துடன் இதனுள் ஆய்வுகூட வசதிகளும் காணப்படுகின்றன. (இ)

## இரட்டைக்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமையும் காலை 9 மணிக்கு கன்னாகம் பொலிஸ்நிலையத்தில் தங்களைத் தெரியப்படுத்தி கையொப்பமிடவேண்டுமென்றும், வழக்கு முடியும் வரை அரசதரப்புச் சாட்சியங்களுடன் தொடர்பு வைக்கக் கூடாதென்றும் தெரிவித்தார் அரசதரப்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜரானார். (மா)


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். நடித்த
கல்யாணிக்கு கல்யாணம்

மனோகரா (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
George Segal, Richard Widmark, Henry Fonda
in
ROLLER COASTER
(scope-color)

ரீகல் (யாழ்நகர்)
சில தினங்கள் மட்டும்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சரோஜாதேவி
கல்யாண பரிசு

சாந்தி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-தேவிகா
நீலவானம்
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
நினைவில் நின்றவள்

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல் கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)

ராஜா (யாழ்- நகர்) தினசரி காலை 10-30, பி.ப. 2-30 மாலை 6-15, இரவு 9-30
துணிவே துணை


## போய தினத்தை யொட்டி இன்று சினிமா காட்சியில்லை

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 14-ம் திகதி
திங்கட்கிழமை
(28—3—83)

மேடம்: போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும், ஆணவப்பேச்சினால் சந்தர்ப்பம் நழுவப்படலாம், எதிரிகள் மறைமுகமான தாக்குதல் நடத்துவர், பொறுமைநன்று.

இடபம்: உறவினர்கள் உதவிக்கு வருவர், வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும், காதலர்கள் வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும், கனிவான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மிதுனம்: தொழில் மாற்றம் இருப்பிடமாற்றம் நன்மையைத்தரும், இதன் மூலம் பதவி உயர்வு கிடைக்கலாம், போட்டி காண்பதற்கு நல்ல தினம், மெத்தவும் பொருள் சேரும்.

கடகம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்பாராதவகையில் ஆதரவுக்கு இடமுண்டு, பகைத்தவர்களே உங்களை பாராட்டிக் கொள்வர், பண விவகாரங்களில் நல்ல திருப்பமுண்டு,

சிங்கம்: மனதில் விரக்திநிலை தென்படும், உடல் நலமும் பாதிக்கப்படலாம், கால்நடைகளினால் நஷ்டம்ஏற்படலாம், பூமிப்பிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்வீர்.

கன்னி: முன்னேற்றம் தடைப்படும், குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப்பகைத்துக் கொள்ள நேரிடும்

துலாம்: கன்னல் மொழி மூலம் காரியங்களைச்சாதிப்பீர்கள், கவர்ச்சிகரமான உடை அணிவதற்கு விரும்புவீர்கள், ஆரம்பத்தில் எதிர்பார்த்தவர்களே உதவ முன்வருவார்கள்.

விருட்சிகம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும், கண்துடைப்புவேலை நடக்கும், பெரியோரை பகைத்துக் கொள்வதில் கவலைப்படுவீர்கள், அவசரக்கோலம் தலை தூக்கும், அவலப்படுவீர்கள்.

தனு: அறிஞர்களின் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும், ஆக்கப்பணியில் துணிவு செலுத்துவீர்கள், புதிய அனுபவங்கள் உருவாகும், வாகனகாமுண்டு.

மகரம்: புத்திரவழியால் புகழுண்டு. புதியபாதையில் நடைபோடுவீர்கள், நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும், குடும்பத்திலும் பிணைப்புக்கள் பலப்படும்.

கும்பம்: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம்பெறும், தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர், பெரியவர் ஒருவருடன் எதிலும் முன்ஆலோசித்து செயலாற்றவும்.

மீனம்; தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சிகாணப்படும், குடும்பத்தில் தென்றல் வீசும், சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும், களஸ்திரவழியால் நன்மைசேர இடமுண்டு. பொன்னான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

# ஏகமனதாக தெரிவு

(புலோலி)

வெருடாவில் கிராமோதய சபைத்தலைவராக ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலையத் தலைவர் திரு. பால பத்மநாதன் போட்டியின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். இக் கிராமோதயசபைத்தலைவர் தெரிவு விசேட சேவை அலுவலர் திரு. து. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

# 'பொலிஸார் பொறுப்புடன் செயல்பட்டால் பொதுமக்கள் பொலிஸ் உறவில் சுமுகநிலை வரும்"

- கல்லூரி அதிபர்

(யாழ்ப்பாணம்)

'பொலிஸார் சட்டத்தின் பாதுகாவலர்கள். அநீதியான கொடூரமான, வெறுக்கத்தக்க செயல்களில் அவர்கள் ஈடுபடக்கூடாது. மதிநுட்பத்தையும், செயல்திறனையும் பயன்படுத்தியே குற்றச் செயல்களை அவர்கள் கட்டுப்படுத்தவேண்டும்.'

இவ்வாறு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அதிபர் திரு ஸி. ஈ. ஆனந்தராஜன் பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் தெரிவித்தார். இக்கூட்டம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் டி. ஐ ஜி ராஜகுரு தலைமையில் நடைபெற்றது. வடமாகாண இராணுவ மற்றும் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளுடன் பொதுமக்கள் பிரதிநிதிகளும், வர்த்தகப் பிரமுகர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. ஆனந்தராஜன் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

'டாக்டர் நந்தசேன ரத்னபால பொலிஸ்-பொதுமக்கள் உறவு பற்றிய நூல் ஒன்றை அண்மையில் வெளியிட்டார். அந்த நூலின் பிரதிகள் சகல பொலிஸாருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

'அந்த நூலில் ஒரு சம்பவம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடொன்றின் கீழ் ஒரு கணவனும் மனைவியும் பொலிஸ் நிலையம் சென்றுள்ளனர். அங்கிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் கணவனை நோக்கி 'பேயா ஏன் உன் மனைவியைத் தாக்கிறாய்?' என்று விசாரணையை ஆரம்பித்தார் இதற்கு மனைவி 'ஐயா, இவர் தினமும்குடித்துவிட்டு வந்து என்னைத் தாக்குகிறார்' என்றார். இன்ஸ்பெக்டர் மீண்டும் கணவனை நோக்கி 'ஏன் அப்படிச் செய்கிறாய்? என்று கேட்டு 'பிசாசே இங்கேபார், அடுத்த தடவை நீ குடித்துவிட்டு வீடுவந்தால் உனது கழுத்தை முறித்து விடுவேன். இந்த தடவை மட்டும் உனக்கு மன்னிப்பு வழங்குகிறேன். அடுத்த தடவை இங்கு வந்தால் உனது கழுத்தை முறித்து ஆறுமாதங்களுக்கு வைத்திய சாலையில் இருக்கச் செய்வேன்' என்றார்.

பொலிஸ் விசாரணைக்குழு பின்னர் ஒருதடவை அந்த மனைவியைச் சந்தித்து கணவனைப் பற்றி விசாரித்தது. அப்போது மனைவி தமது கணவர் தொடர்ந்தும் குடிக்கிறார். என்று பதிலளித்தார். அப்போது ஏன் முறைப்பாடு செய்யவில்லை' என்று பொலிஸார் விசாரித்தனர். இதற்கு மனைவி 'முறைப்பாடு செய்தால் இன்ஸ்பெக்டர் கணவனின் கழுத்தை முறித்துவிடுவார். அத்துடன் ஆறுமாதங்கள் வைத்தியசாலையிலும் இருக்கச் செய்து விடுவார். அப்படிச் செய்தால் எவர் எனக்கு உணவளிப்பர்' என்றாராம்!

எனவே பொலிஸார் மக்களுடைய பிரச்சினையை நன்கு ஆராய்ந்து தீர்வுகாண முயலவேண்டும். தவறான பதில்களாலும், நடவடிக்கைகளாலும் எதையும் சாதித்து விட முடியாதென்பதற்கு மேற்குறிப்பிட்ட கதை நல்ல உதாரணமாகும்.

"1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சிகள் குழம்பப்பட்டு ஒன்பதுபேர் கொலைப்பட்டதற்கு பொறுப்பாக விருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் பதவி உயர்த்தப்பட்டார். திரு. ஜயவர்த்தனவின் அரசாங்க முன் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரை பதவி உயர்த்தியது. அத்துடன் அந்த அதிகாரி மீது நீதிமன்றத்தால் அபராதமாக விதிக்கப்பட்ட பத்தாயிரம் ரூபாவையும் அமைச்சரவையே செலுத்த முன்வந்துள்ளது." எனவே இத்தகைய அரசாங்க நடவடிக்கைகளே பொதுமக்கள் - பொலிஸ் உறவை பாழடையச் செய்கிறது. இந்நிலையில் பொலிசார் மிக அவதானத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயல்படும் பட்சத்திலேயே பொதுமக்கள்-பொலிஸ் உறவில் சுமுக நிலை தோன்றும் என்றார். (கி)

## விறுவிறுப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரசிகர்கள் விளையாட்டைக் கண்டுகளித்தனர்.

### ஸ்கோர் விபரம்

கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 179 ஓட்டங்களும், இரண்டாவது இன்னிங்ஸில் எட்டு விக்கெட் நஷ்டத்துக்கு 175 ஓட்டங்களும் எடுத்துஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

யாழ் இந்து முதல் இன்னிங்ஸில் 139 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்ஸில் ஆட்ட நேர இறுதிவரை எட்டு விக்கெட்டுகள் இழப்புக்கு 205 ஓட்டங்களும் எடுத்தது.

வெற்றி வாய்ப்பு இருபக்கமும் இருந்தும் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## சபையில் சிந்தியன்வ

நமது நிருபர்

பிரதி உயர் கல்வி அமைச்சர்:- ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் குட்டிமணியை விடுதலை செய் என்றும் பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யுமாறும் பல்கலைக் கழகத்திலிருந்து பொலிசாரை வெளியேற்றுமாறும் சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன குட்டிமணியை எனக்குத் தெரியாது. கலவான உறுப்பினர் தான் இதனைச் செய்திருப்பார் என எண்ணுகிறேன்.

பிரதி உயர் கல்வி அமைச்சர்:- ரோஹண விஜேவீர தென்கிழக்கு ஆசியாவிலேயே மாபெரும் பயங்கர குற்றவாளி.

சரத்:- முல்லேரியாவில் இருப்பவர்களும் இப்படித்தான் பேசுவார்கள்.

பிரதி உயர் கல்வி அமைச்சர்:- விஜயவீரவுக்கு அதிகார பைத்தியம் பிடித்துவிட்டது. தமது இந்தப் பைத்தியத்திற்கு அவர் அப்பாவி மாணவர்களைப் பலியாக்கினார்

பிரதிஉயர் கல்வி அமைச்சர்: ஜயவர்த்தனபுரப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் வீடுகளை எரித்தனர். மோட்டார் சைக்கிள்களை எரித்தனர். அப்போது கலவான உறுப்பினர் தமக்கும் தமது மாமாவுக்கும் நல்ல தருணம் வருகிறது எனப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நல்லூர் சிவா: பல்கலைக் கழகமாணவர் பிரச்னைகுறித்து ஜனாதிபதி மாணவர்களுடன் ஏன் பேச்சு நடத்தக்கூடாது.

சிவா:- மாணவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என அரசு கூறுவது விரோதமாக இருக்கிறது.

சிவா:- 18-வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது ஆனால் அவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாதா?

ஆனந்த தசநாயக்கா: (அபிவிருத்தி லொத்தர் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு) அபிவிருத்தி லொத்தர் இன்று மாணவர்களையும் கெடுத்துவருகிறது. வீதியெங்கும் சூதாட்டமே நடக்கிறது.

அமைச்சர் தேவநாயகம்: அபிவிருத்திச்சபைகள் திறம்பட இயங்கவேண்டுமானால் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் மாவட்ட அமைச்சில் பங்குபற்றுவது குறித்து ஒரு முடிவுக்குவரவேண்டும்.

# ஜே. ஆரின் 40-வது ஆண்டு சேவை பூர்த்தி

## நினைவாக விஞ்ஞான தொழில்நுட்ப நிலையம்

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பாராளுமன்ற அங்கத்துவராகிய 40வது ஆண்டுப் பூர்த்தியினையொட்டி விஞ்ஞான தொழில்நுட்ப நிலையமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

1943ம்ஆண்டு ஏப்ரல் மாதம் களனித் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக முதன் முதல் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ஜே. ஆர்., இவ்வாண்டு இச்சேவையில் 40வது ஆண்டினைப் பூர்த்திசெய்கின்றார்.

ஜெயவர்த்தன தொழில் நுட்ப நிலையம் என்ற பெயரினை கொண்ட இந்நிலையத்தினை அமைப்பதற்கான பொறுப்புக்களை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் சிறில் மத்தியூ ஏற்றுள்ளார். 5 பேர் கொண்ட குழுவும் இந்நடவடிக்கைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையினைக் கைத்தொழில் விஞ்ஞானமயமாக்குவது என்ற ஜனாதிபதியின் நோக்கத்தினை பிரதிபலிக்கும் வகையிலேயே இந்நிலையம் ஆரம்பிக்கப்படுகிறது. (சூ)

## சவூதியில் விபத்தில் மரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சவூதி அரேபியாவில் விபத்துக்குள்ளாகி மரணமானார்.

கைதடியைச் சேர்ந்த எஸ். சந்திரசேகர் [40 வயது]என்பவரே மரணமானவராவார்.

இவர் சம்பளமற்ற லீவில் 6மாதங்களுக்கு முன்னர் சவூதி அரேபியாவில் வாகனச் சாரதியாக வேலைக்குச் சென்றார் என்றும் அங்கு வாகனம்செலுத்தும்பொழுது விபத்துக்குள்ளாகி மூன்று மாதங்களாக அங்குள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தவரென்றும் கடந்த 13ம் திகதி இவர் சுயநினைவற்ற நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுநேற்று மரணமானாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## இந்தியாவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதே நேரத்தில் வரட்சி நிலைமையை நேரில் கண்டறிய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளார்

இந்திராகாந்தியின் விஜயத்தையொட்டி சென்னையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரதமர் இந்திராகாந்தியுடன் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமனும் தமிழ்நாட் நாட்டிற்கு விஜயம்செய்யவுள்ளார். [வெ]

## பின்தங்கிய

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ந்த மக்களுக்கு அந்த 15 வீத விசேட சலுகையையும் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த முறையை அமுலுக்குக் கொண்டுவந்தமைக்காக எனது சார்பிலும், பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த எம். பி.க்கள் சார்பிலும் அமைச்சருக்கும் அரசுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

பல்கலைக்கழக மாணவர் பிரச்சினையை அடக்குமுறை மூலம் தீர்க்க முயன்றால் படுமோசமான நிலையே ஏற்படும். முடிந்தவரை அமைதியான தீர்வை ஏற்படுத்தி பிரச்சினை மேலும் பரவாது தடுக்கவேண்டும்.

திருகோணமலைக்கு தொழில் நுட்ப நிலையமொன்று வேண்டும் என்று கடந்த ஆண்டு கேட்டேன் நிறவப்படவில்லை இந்த ஆண்டிலாவது அதனை நிறுவிக்காவேண்டும் ''

## தெற்காசிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

இலங்கை, மாலைதீவு ஆகியநாடுகளின் விளையாட்டு கோஷ்டிகள் மட்டுமே வந்திருந்தன.

இப்போட்டியில் ஆறு தெற்காசிய நாடுகள் கலந்து கொள்ளவிருந்தன (வெ)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சி
6-01 குழந்தைகளுக்கான விசேட பேயாதின நிகழ்ச்சி (சிங்களம்)
6-15 குழந்தைகளுக்கான நிகழ்ச்சி (சிங்களம்)
7-00 செய்திமஞ்சரி [தமிழ்]
7-14 நாளைய நிகழ்ச்சிகள்.
7-15 குழந்தைகளுக்கான நடகம் (சிங்களம்)
7-45: விசேட ஆங்கில நிகழ்ச்சி.
8-15; செய்தி மஞ்சரி-சிங்களம்.
8-29: நாளைய நிகழ்ச்சிகள்.
8-30: ஆஸ்திரேலியா-இங்கிலாந்து கிரிக்கெட். டெஸ்ட் (இறுதிநாள் விளையாட்டு]
9-00: சிங்கள சிறப்புரை.
8-30—செய்தி மஞ்சரி- ஆங்கிலம்.
9-45— பௌத்த தியானம் சம்பந்தமாக டாக்டர் மிர்பேசப்பிரையா வுடன் பேட்டி.
10-00 — தப்பறியும் தொடர் நவீனம் (ஆங்கிலம்)


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்றுதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிறுன்ஸ் லிமிட்
82, கன்றுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3



உ
சிவமயம்

# திருமண அழைப்பு

காலம்: 28-03-83 திங்கட்கிழமை இரவு 12மணி முதல் 1 மணி30 நிமிடம் வரை.
இடம்: "அமுதசுரபி" (புளியங்கூடல் அம்மன் கோவிலடி)

மணமகன்: தர்மபாலன் (யப்ஃனு ஏஜென்சி)

மணமகள்: வேதசிரோன்மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு திருமதி ச. சோமசுந்தரம் வேலணை மேற்கு, வேலணை.
திரு திருமதி மு. கோபாலபிள்ளை புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

6702


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.